**இலங்கை ஹுதபிம அதிகாரசபை (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை)- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஹுதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் 42 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அிகாரசபைக்குச் சொந்தமான இசுசு லொரி வண்டிக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3,500,000 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அதற்காக நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | குறித்த ஆண்டின் போது இந் லொரி எமது அதிகார சபையின் சந்தைப்படுத்தல் செயற்திட்டத்திற்குரியதாக காணப்பட்ட சொத்தொன்றாக இருந்தமையால் அதிகாரசபை நிதிக்கூற்றுக்கனளில் குறிப்பிடப்படவில்லையெனினும் சந்தைப்படுத்தல் செயற் திட்டத்தின் கணக்கில் அது நிருபணமாகியிருந்ததாக 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | பொது துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 92 ஆம் பந்தியின் பிரகாரம் தற்காலிகமாக செயற்படாதுள்ள தற்போது பயன்படுத்தப்படும் ஆதனங்கள், பொறிகள மற்றும் உபகரணங்கள் | 2021 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென. | பொது துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| தொடர்பாக விரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | வேண்டும். |
| (இ) 2017 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யும் கொள்கை மற்றப்பட்டிருந்த போதும் 2017 சனவரி 01 இல் காணப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதிக்காக மாத்திரம் கணக்கீட்டுக் கொள்கை மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஏற்பட்டிருந்த பெறுமானத்தேய்வு தாக்கம் பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 10,851,120 ஆன சொத்துக்களுக்குரிய சீராக்கங்கள் செய்து நிதிக்கூற்றுக்களை சிரயாக பிரதிபலித்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் சந்தைப்படுத்தல் செயற் திட்டத்திற்காக சொத்துக்களின் பெறுமானத் தேய்வு அச்செயற் திட்டத்திற்கு பொறுப்பான வர்களால் மேற்கொள்ளப்பட வில்லையென. | பொது துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு செயற்பாடுகளில் நிலையான சொத்துக்களை கொள்வனவு ரூபா 12,464,798 ஆக இருந்த போதும் ஆண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கையேற்றல் ரூபா 5,286,005 ஆக இருந்தமையால் ரூபா 7,178,793 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காலப்பகுதியில் கையேற்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி, அப்பெறுமானத்தில் அரச மூலதன மானியங்கள் மூலம் பெற்றுக்கொண்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் பணமாக கொடுப்பனவு செய்த பெறுமதி ஆகிய விபரங்களின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 5,286,005 ஆன சொத்துக்கள் தொடர்பாக இதன் தேவைப்பாட்டின் பிரகாரம் விபரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து முறையாக செயற்படும் வகையில் உரிய உத்தியோக்தர்களுக்கு ஆலோசணை வழங்கியுள்ளதுடன் அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென. | பொது துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்கு வைத்தல் தவறு காரணமாக அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்குரிய செலவினம் ரூபா 3,901,596 கூடுதலாக | 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் அதனை | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்களை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப் பெறுமதியால் கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | முழுமையாக சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அந்த உத்தியோகத்தருக்கு கடமைகளை முறைப்படி நிறைவேற்றுமாறு ஆலோசணை வழங்கியுள்ளதாக. | வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | வேலையை முடிவுறுத்தல் தொடர்பாக இரண்டு ஊழியர்களால் அதிகாரசபைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த இரண்டு வழக்குகளுக்குரிய மொத்தம் ரூபா 1,605,294 இழப்பீடாக கொடுப்பனவு செய்வதற்கு 2020 மார்ச் 12 ஆந் திகதி நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப் பட்டிருந்தது, மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நட்டஈடு கொடுப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் தேவையான நிதிஏற்பாடு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலம் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஹதபிம கூட்டுறவுச் சங்கத்தினால் இலங்கை ஹதபிம அதிகாரசபைக்குரிய சந்தைப்படுத்தல் பிரிவு பயன்படுத்தப்பட்டு வந்த பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத மேசைகள், கதிரைகள் இராக்கைகள் உட்பட தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் விற்பனை செயறபாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட ஏனைய உபகரணங்கள் போன்ற 204 பொருட் தொகுதிகள் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து தமது பொறுப்பிற்கு எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட் வந்த போதும் அவ்வாறு பொருட்களை கையளிப்பதற்கு அதிகாரசபையின் நிர்வாக சபையினால் அங்ககாரமொன்று இருக்கவில்லை. மெலும் கட்டம்பே மற்றம் வெலிகமவில் அமைந்துள்ள சந்தைப்படுத்தல் கட்டிடங்கள்வளவும் கூட்டுறவுச் சங்கத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதும் அதற்காக அதிகாரசபையின் நிர்வாக சபையினால் அங்ககாரமொன்று பெற்றிருக்கவில்லை. | 2017 மார்ச் 31 ஆந் திகதி அமைச்சரவை பத்திரம் அப்போதய நிறுவனத்திற்கு பொறுப்பாக உள்ள விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஹதபிம அதிகாரசபைக்கு சொந்தமான ஆதனங்கள் சொத்துக்கள் அல்லது நிதி என்பவற்றை உத்தேச சங்கத்திற்கு வழங்குவதாயின் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென தீர்மானனிக்கப்பட்ட போதும் அவ்வாறான ஒன்ற இடம்பெறவில்லை. அவ்வாறே அமைச்சரின் கட்டளையில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை குறிப்பிடப்படும் காலப் பகுதியில் அச்சங்கத்திற்கு மேலே குறப்பிட்ட சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொருட்களை கையளிக்க வேண்டுமெனவும் ஆனால் அதற்கு முரணாக | அமைச்சரவை தீர்மானம் செயற்படுத்தப் பட வேண்டும். |

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதி ரூபா 28,605,445 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,054,805 தொகை ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாகக் காணப்படும் மீதியாகும் இம்மீயை தீர்வு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,645,041 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,732,336 தொகை ஓராண்டிற்கும் மேற்பட்ட செலுத்த வேண்டியதாக இருந்தது.. | தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | உடன்படிக்கை பிரகாரம் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து ரூபா 2,094,280 தொகையொன்று பெற வேண்டியதாக காட்டப் பட்டிருந்த போதிலும் அத்திகதியில் சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஹதபிம அதிகார சபையில் இருந்து 1989 ஆண்டிலிருந்து ரூபா 54,911,756 தொகை கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வேறுபாட்டிற்கு காரணங்களை கண்டறிந்து தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்திடம் விசாரித்துள்ளதாக. | கொடுக்கல் வாங்கல்களுக்குரிய உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஹதபிம அதிகாரசபையின் விடயப் பரப்பினை விரிவாக்குதல் மற்றும் நவீனமயப்படுத்தல் என்ற தலைப்பில் 2017 மார்ச் 31 ஆந் திகதி பிராந்திய அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2017 ஏப்ரல் 25 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | | | |
| (i) அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரித்த நிபுணர் குழுவின் பரிந்துரை வர்த்தமானி மூலம் கட்டளையொன்றாக வெளியிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல். | வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | குறித்த வர்த்தமானி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அவ்வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என எவ்வித சான்றுகளும் கிடைக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்த வேண்டும். |
| (ii) அதிகாரசபைக்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகாக கூட்டிணைந்த திட்டமொன்றும் மனித வளத் திட்டமொன்றையும் | கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரித்தல். | | | |
| (iii) | சந்தைப்படுத்தல் மேம்பாட்டு பிரிவினை கூட்டுறவுச் சங்க மொன்றாக பதிவு செய்து ஊழியர் களை அச்சங்கத்தின் ஊழியர்களாக ஆட்சேர்ப்பு செய்தல். | ஊழியர்களை கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதும் பின்னர் அதாவது 2020 சனவரி 07 ஆந் திகதி முதல் 12 ஊழியர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தன. | இந்த விற்பனை நிலையம் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் சட்டவிரோதமான முறையில் வ.ப ஹதபிம கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடைய கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த துடன் அதில் குறிப்பிட்ட உத்தியோகத்தரும் அச்சங்கத்திற்கு இணைக்கப்பட்டதன் பின்னர் அங்கு அவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் அவரை எமது ஊழியர் என கருத முடியாது ஆதலால் அது தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்பொன்று கையளிக்கப்பட வில்லையென | அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 110 | கொத்மலே மற்றும் பள்ளே கலே பண்ணையில் ரூபா 129,910 ஆன தொகையான நாற்றுக்கள் சேதம், பள்ளேகல பண்ணையில் ரூபா 565,594 பெறுமதியான கோழிக் குஞ்சுகள் மற்றும் விலங்குகள் மரணித்திருந்ததுடன் முட்டைகள் விரயமொன்று இடம்பெற்றிருந்த போதும் அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது பள்ளேகல பண்ணையீல் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டை நாளாந்தம் நாளது வரையாக்குவதற்கும் மாதாந்தம் சேத அறிக்கையை தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு எழுத்து மற்றும் வாய்மொழி மூலம் ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 மற்றும் 2016 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 06/2016 | கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக அமைச்சு செயலாளரின் | தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை | அல்லது திணைக்களத் தலைவரின் கவனம் செலுத்த வேண்டிய போதிலும் இரண்டு வங்கிக் கணக்கிற்குரிய 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை விநியோ கிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத மொத்தம் ரூபா 1,030,720 ஆன 131 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| iii | நிதிப்பிரமாணம் 880 | அரசின் நிதி அல்லது வருமானம் பொருட்கள் என்பவற்றிற்கு பொறுப்பாக உள்ள அல்லது அவற்றை பகிர்ந்தளிப்பது தொடர்பில் அல்லது நிர்வாக ரீதியாக பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் அரசாங்க கணக்கிற்கு உரிய உறுதிச் சீட்டுக்களில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்கள் பிணை வைக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையின் 10 பதவிகளுக்கு உரிய 23 உத்தியோகத்தர்களிட மிருந்து பிணை பெற்றுக் கொள்ளப்படவில்லை. | தற்போது அறவிடப்பட வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களிட மிருந்து பிணை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,059,573 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,173,377 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 886,196 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் அபிவிருத்திச் செலவினம் ரூபா 61,196,209 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கொத்மலே மற்றும் பள்ளேகல பண்ணை ஆகிய இரண்டில் நட்டம் ரூபா 9,933,656 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது முறையான ரூபா 3,496,573 மற்றும் ரூபா 4,503,158 ஆன நட்டம் அடைந்திருந்தது. 2015 மார்ச் 04 ஆந் திகதிய 04/04/07 ஆம் இலக்க நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அந்த இரண்டு பண்ணைகளுக்காக உற்பத்தி மற்றும் வருமானம் திட்டவட்டமாக இனங்காணப்பட்ட மாதாந்த இணை பிரிப்புடன் வியாபாரத் திட்டமொன்று தயாரித்து பண்ணை இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இரண்டு பண்ணைகளுக்காக வியாபார திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் அங்கு தேவையான திருத்தங்கள் மேற்கொண்டு மிகவும் நடைமுறை ரீதியான செயற்திட்டமொன்று விரைவில் பண்ணைக்கு தயாரித்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கையளிப்பிற்காக உரிய கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையாக வியாபார திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) விற்பனை திட்டத்தின் கீழ் ரூபா 5,568,974 செலவு செய்து 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட இங்கிரிய விற்பனை நிலையம் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் 2020 ஆம் ஆண்டின் போது இங்கிரிய பிரதேச | இதுவரை திட்டமொன்று இல்லாமல் காணி கையளிப்பின்றி அதிகாரசபை ஊடாக நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு இடை நிறுத்தப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. முறையான திட்டம் ஒன்றில்லாமல் நடவடிக்கை எடுத்தமை அதற்கு காரணமாக இருந்தது.

**3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொத்மலே பண்ணை 05 ஏக்கர் அளவிலான காணியுடன் கூடியதாக இருந்தது. பயிர்செய்கையாக நாற்றுமேடைகள், மரக்கறி மற்றும் கீரை வகை செய்கை, மாடு வளர்ப்பு மற்றும் வியாபார நிலையமொன்று என்பன நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதும் 03 ஏக்கர் அளவில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பண்ணையில் உற்பத்திக்காக 3 ஏக்கர் அளவிலான காணி மாத்திரம் இருப்பதை ஏற்றுக் கொள்வதுடன் இந்த ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சில ஏக்கர் நாற்று மேடைக்காக பயன்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சொத்துக்களிலிருந்து உச்ச பயனை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 ஏனைய அமைப்புக்களின் வளங்களைப் பயன்படுத்துதல்**

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வேறு நிறுவனத்திற்குரிய காணியை முறையாக பொறுப்பேற்காமல் அதிகாரசபையால் நீண்டகாலப் பாவனைக்காக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்காணியில் முன்னைய ஆண்டிற்கு முன்னரான ஆண்டுகளின் போது ரூபா 5,724,114 தொகை மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 3,176,631 செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் சில கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டன. கொத்மலே பண்ணையில் பயிற்சி நிலையமொன்றை பராமரித்த செல்வதற்காக ரூபா 535,100 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் | முறையாக அதிகாரசபைக்கு கையளிக்கப்படாதிருந்த தலைமை அலுவலக வளவு, உத்தியோகபூர்வ இல்லம், பள்ளேகலே மற்றும் கொத்மலே பண்ணைகளை அதிகாரசபைக்கு கையேற்பதற்கு உரிய நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.1(ஆ) பிரகாரம் காணி கையேற்கப்பட்டதன் பின்னர் நிர்மாணம் மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் காணப்படும் சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மற்றும் பண்ணையிலுள்ள குதிரை தொழுவங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**3.4 மனித வளமுகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் பண்ணைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி யொன்றை ஏற்படுத்தாமல் ஹதபிம அதிகாரசபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 12 பேரை ஈடுபடுத்தி பண்ணை செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | தேவைப்பாட்டின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்பவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.4 பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பயிற்சி தேவைகளை மதிப்பீடு செய்வதற்கு நிறுவனத்தின் அடுத்த மாற்றங்களுக்காக தயாராகும் வரையில் ஊழியர் செயற்திறனை மேம்படுத்து வதற்காக பயிற்சி குழுவொன்று நியமிக்கப்பட வேண்டி போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் கடந்த 05 ஆண்டுகளில் மனித வள அபிவிருத்திக்காக ரூபா 3,702,821 தொகை திட்டமிடல் ஒன்று இன்றி செலவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது | பயிற்சி தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்காக நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது முயற்சிகள் பணிப்பாளரின் 2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 இலக்க சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் | எதிர்காலத்தில் உரிய காலப் பகுதியில் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகள் அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி 08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் செயலாளரின் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தேசிய மட்டத்தில் தந்திரோபாய முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் நிறுவனம் சார்ந்த, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் அடைந்து கொள்வதற்காக கூட்டிணைப்பு செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர் பெயரிடப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |